# பிரிவு I:
# திரு அவதாரத்திற்கு முன்பு

*இயேசுவை அவர் இப்பூமியில் செய்த ஊழியத்தின் பாங்குகளில் நினைத்துப் பார்க்கும் மனப்பாங்கு உள்ளவராக ஒருவர் இருக்கின்றார். இந்த ஆண் குழந்தையானது சாதாரணமாய்ப் பிறந்தது அல்ல என்பதை காபிரியேல் தூதனால் கூறப்பட்ட அறிவிப்பு நமக்கு நினைவூட்டுகின்றது. அவரது பிறப்பானது தேவனுடைய மேசியா வந்து சேர்ந்திருந்தார் என்ற நற்செய்தியுடன் இணைக்கப்பட்டிருந்தது. அது தேவனுக்குத் துதியும் மகிமையும் செலுத்தும் நிகழ்ச்சியாக இருந்தது. அவரது பிறப்பைச் சுற்றிலும் நடந்த எல்லா விபரங்களும் சிந்தையில் வருகின்றன.*

*அது ஞானிகள் தங்களைக் காட்டிலும் ஞானமான ஒருவருக்கு வழிபாடு செலுத்திய வேளையாய் இருந்தது. அவர் சிறு பையனாய் இருந்த போது தேவாலயத்தில் தமது கேள்விகள் மற்றும் பதில்களால் யூதத்துவத்தின் வல்லுநர்களை ஆச்சரியப்படச் செய்த நிகழ்ச்சி என்ற ஒரு சிறு கண்ணோட்டமானது அவரது இயற்கையான ஞானத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றது. அவர் குழந்தைப் பிராயத்திலிருந்து மனிதனாய் வளர்ந்தது பற்றிய அவரது மனிதத்துவ வளர்ச்சியின் சுருக்கமான கூற்றொன்று அவர் ஞானத்திலும், தேவனுடைய கிருபையிலும் மற்றும் மனிதருடைய தயவிலும் வளர்ந்ததை வலியுறுத்துகின்றது.[1]*

*இயேசுவின் ஞானத்தைப் பற்றிய இந்த வலியுறுத்தலின் மறைமுகமான கருத்தை நாம் எப்பொழுதாவது ஆழமாய்ச் சிந்தித்திருக்கின்றோமா? அவரது சொந்த ஊழியத்தின் ஆரம்பத்தில் அவரது ஞானஸ்நானமானது “எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காகப் பெறப்பட்டது” என்று அவர் கூறியபோது அவருக்கிருந்த மிகமேன்மையான உட்கண்ணோட்டத்தை நாம் பற்றியிருக்கின்றோமா? சாத்தான் மூலம் தரப்பட்ட சோதனைகள் எல்லாவற்றையும் எதிர்த்து நிற்க அவரது வழிமுறை மற்றும் திறமையானது அவர் தம் அற்புதமான அறிவையும் தேவனுடைய வசனத்தை உடனடியாகப் பயன்படுத்தியதையும் கொண்டதாகும் என்று நாம் கவனித்திருக்கின்றோமா? இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் விளக்கப்பட்ட அவரது மிக மேன்மையான ஞானத்தினால் - மனிதத் திறனுக்கு மேலாக எழும் ஞானத்தினால் - நாம் வியப்பை எய்தியிருக்கின்றோமா? ஆம்! இயேசுவின் ஞானமானது அவரது ஒவ்வொரு வார்த்தை, செயல்பாடு மற்றும் எண்ணப்போக்கு ஆகியவற்றில் ஒளிர்கின்றது!*

*இயேசுவின் இந்த ஞானத்தினுடைய செயல் விளக்கமானது தவிர்க்க முடியாதது ஆகும். தண்ணீரானது ஈரமாய் இருப்பதிலிருந்து நீங்கிப் போக முடியுமா? நெருப்பானது சூடாய் இருப்பதில் இருந்து நீங்கிப் போக முடியுமா? தேவன் ஞானமாய் இருப்பதில் இருந்து நீங்கிப் போக முடியுமா? "இல்லை" என்பதே இந்தக் கேள்விகளுக்குப் பதிலாகும்! தண்ணீர் ஈரமாய் இருப்பதும், நெருப்பு சூடாய் இருப்பதும் அவைகளின் இயல்பான தன்மையாகும். ஞானமாய் இருப்பது என்பதும் தேவனுடைய இயல்பு ஆகும். நித்தியம் மற்றும் காலம் யாவற்றிலும் தேவன் மதியீனமான செயல் ஒன்றையாகிலும் செய்ததில்லை அல்லது மதியீனமான வார்த்தை ஒன்றையாகிலும் கூறியதில்லை.*

*திருத்துவத்தைப் பற்றிய நமது பாடத்தை தொடருகையில் இயேசு - குமாரனாகிய தேவன் - நம்முடைய உலகத்தில் அவருடைய பிறப்புக்கு முன்னும் கூட எவ்விதம் பிதாவின் ஞானத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்தினார் என்று காண்போம்.*

---

*குறிப்புகள்*

*[1]இவைகள் இயேசுவின் வாழ்வு பற்றிய கூற்றிற்குக் குறிப்புகளாகும்: மத். 2:1, 2, 11; 3:13-15; 4:1-11; லூக். 1:19; 2:11, 13, 14, 42-47, 49, 52.*